**செய்தி வெளியீடு எண்: 801** **நாள்: 01.11.2018**

## <u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 31.10.2018 அன்று தலைமைச் செயலகத்தில், மதுரை மாநகராட்சியில் உள்ள மாட்டுத்தாவணி கனிகள் விற்பனைக் கூடத்தில் 21 கோடியே 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 240 மொத்த வியாபார பழக்கடைகள், வடிகால், சிறுபாலம், சுற்றுச் சுவர், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, பாதாள சாக்கடைகள், தெருவிளக்குகள் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும், தேனி, சிவகங்கை, தஞ்சாவூர், நாமக்கல், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் 10 கோடியே 96 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட பூங்காவினை திறந்து வைத்தார்கள்.

நகர்ப்புறங்களில் பெருகி வரும் மக்கட்தொகைக்கேற்ப குடிமைப் பணிகளை நிறைவேற்றிக் கொடுப்பது, அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை வழங்குவது உள்ளாட்சி அமைப்புகளின் தலையாய கடமைகளாகும். இத்தகைய பணிகளை மேற்கொள்ளும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டை ஊக்குவிக்கும் வகையிலும், பொதுமக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யவும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை சீரிய முறையில் செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், நகராட்சி நிர்வாகம் சார்பில் மதுரை மாநகராட்சியில் உள்ள மாட்டுத்தாவணி கனிகள் விற்பனைக் கூடத்தில் 10 கோடியே 5 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 240 மொத்த வியாபார பழக்கடைகள் மற்றும் 11 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள வடிகால், சிறுபாலம், கான்கிரீட் தளம், சுற்றுச் சுவர், மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, பாதாள சாக்கடைகள், தெருவிளக்குகள் உள்ளிட்ட அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை காணொலிக் காட்சி மூலமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி துவக்கி வைத்தார்கள்.

மேலும், தேனி மாவட்டம், தேனி–அல்லிநகரம் நகராட்சியில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் 71 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும்,

கம்பம் நகராட்சி, தேனி–குமுளி பிரதான சாலையில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கும்பகோணம் நகராட்சி, டாக்டர் மூர்த்தி சாலையில் உள்ள அரசு மருத்துவமனை வளாகத்தில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், கட்டப்பட்டுள்ள உள்நோயாளிகளின் உதவியாளர்கள் சிறப்பு தங்கும் விடுதிகள்;

சிவகங்கை நகராட்சி, மருதுபாண்டியர் நகரில் 2 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள துப்புரவு தொழிலாளர் குடியிருப்பு கட்டடம்; தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் நகராட்சி, டாக்டர் பெசன்ட் சாலையில் உள்ள காரனேஷன் மகப்பேறு மருத்துவமனையில் 1 கோடியே 18 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவமனைக் கட்டடம் மற்றும் செந்தில்நாதன் நகரில் 2 கோடியே 17 லட்சத்து 45 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்ட பூங்கா;

பேரூராட்சிகள் நிர்வாகம் சார்பில், நாமக்கல் மாவட்டம் – வெங்கரை மற்றும் இரா. புதுப்பட்டி பேரூராட்சிகளில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், சிவகங்கை மாவட்டம் – நாட்டரசன்கோட்டை பேரூராட்சியில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், திருநெல்வேலி மாவட்டம் – ஏர்வாடி பேரூராட்சியில் 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும் கட்டப்பட்டுள்ள பேரூராட்சி அலுவலகக் கட்டடங்கள்; திருச்சிராப்பள்ளி மாவட்டம் – பொன்னம்பட்டி பேரூராட்சியில் 70 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சமுதாயக் கூடம்;

என மொத்தம், 32 கோடியே 66 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு. கோ.பிரகாஷ், இ.ஆ.ப., பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.எஸ்.பழனிசாமி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 1.11.2018**